நகர மன்றம், உளுந்தூர்பேட்டை நாள். 01.12.2025

## அறிவிப்பு

உளுந்தூர்பேட்டை நகரமன்ற அவசரக் கூட்டம் 01.12.2025ம் தேதி திங்கட் கிழமை காலை 10.30 மணியளவில் நகரமன்ற தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமன்ற கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை - திரு. கே. திருநாவுக்கரசு அவர்கள்,**

**நகர மன்ற தலைவர்**

## கூட்ட நிரல்

| வ.எண் | பொருள்கள் டிசம்பர் 2025 அவசரக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சியில் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மன்ற உறுப்பினராக நியமனம் செய்ய அறிவித்ததை தொடர்ந்து இந்நகராட்சியில் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினராக திரு.பழனிவேல் த/பெ. வேலாயுதம் உளுந்தூர்பேட்டை என்பவரை மாவட்ட நிர்வாகம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நியமன செய்யப்பட்டு உத்திரவிட்டதின் பேரில் 26.11.2025 அன்று காலை 10.00 மணியளவில் உளுந்தூர்பேட்டை நகராட்சியில் நகரமன்ற தலைவர் திரு. கே. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நகராட்சி ஆணையாளர் செல்வி.S.K.புஷ்ரா அவர்களின் முன்னிலையில் பிரமான உறுதிமொழி எடுத்து பதவியேற்றுக்கொண்டார். எனவே மாற்றுத்திறனாளி உறுப்பினராக திரு.பழனிவேல் என்பவருக்கு வாழ்த்துக்களையும், மாற்றுத்திறனாளிகளை மன்ற உறுப்பினராக நியமனம் செய்ய அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு | 674 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>நன்றினையும்  இந்நகர மன்றத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.</td><td></td><td></td></tr>
<tr><td>2</td><td>
உளுந்தூர்பேட்டை நகராட்சியில் வருவாய் நிதி 2025-2026ன் கீழ் நகராட்சியில் தூய்மைப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் 116 தூய்மை பணியாளர்களுக்கு தினந்தோரும் ஒரு வேலை (காலை ) உணவு வழங்கும் திட்டத்திற்கு தகுதி வாய்ந்த உணவு வழங்கும் சேவை நிறுவனத்தை தேர்வு செய்தல் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னனு (E-Tendering) முறையில் 21.11.2025-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">உளுந்தூர்பேட்டை நகராட்சியில் தூய்மைப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் தூய்மை பணியாளர்களுக்கு தினந்தோரும் ஒரு வேலை (காலை ) உணவு வழங்கும் திட்டத்திற்கு தகுதி வாய்ந்த உணவு வழங்கும் சேவை நிறுவனத்தை தேர்வு செய்தல்</td><td rowspan="2">ரூ. 70,54,737/- (ரூ.22,37,823 ஓர் ஆண்டுக்கு)</td><td>திரு.ஆறுமுகம், உளுந்தூர்பேட்டை</td><td>ரூ. 22,36,187/-<br>-0.07 % மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>M/s சாய் ஸ்ரீ ஆரியபவன் திருக்கோவிலூர்</td><td>ரூ. 22,67,307/-<br>+1.32 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் (மதிப்பீட்டை விட 0.07% குறைவு) வழங்கிய திரு.ஆறுமுகம், உளுந்தூர்பேட்டை - 606107, என்ற  ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:-<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td>675</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2. மேற்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07%-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆறுமுகம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம், மேற்படி திட்ட பணியின் அவரச அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று தொடர் மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>3. மேற்படி செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க. எண். 2090 / 2025 / இ1)** | | |
| 3 | தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் 1920பிரிவு-34இல் அரசின் முன் அனுமதியுடன் நகர மன்றங்கள் சொத்துவரியுடன் "கல்வி வரி" விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு 35(1)இல் "சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5% விழுக்காட்டிற்கும் மிகாமல்" வரி விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது.<br>தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 (திருத்தம்) 2022ல் அனைத்து நகர்புற உள்ளாட்சிகளில் 13.04.2023 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. பிரிவு 80-இல் நகர்மன்றங்கள் கல்வி விரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br>தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 (திருத்தம்) 2022ல் நகர மன்றங்கள் கல்வி வரி விதிகத்தினை பிரிவு 81-இன்படி வரி விதிப்பு செய்ய தீர்மானம் செய்த பின்பு வரிவிதிப்பு செய்யப்படவுள்ள விபரத்தினை உரிய நடைமுறைகளை பின்பற்றி பொதுமக்களுக்கு விளம்பரம் செய்து அதன் மீதான ஆலோசனைகள் / முறையீடு குறிப்பிட்ட நாட்களுக்குள் பெற்று அதனை நகர்மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைத்து இறுதிமுடிவின் மீது அரசாணை பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுளள்து. | 676 | **மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

உளுந்தூர்பேட்டை நகராட்சியில் கீழ்காணும் விகிதப்படி சொத்துவரி இனம் வாரியாக தலைப்பு வாரியாக திருத்தம் செய்யப்பட்ட சதவீதத்தின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் செயல்படுத்திட நகர்மன்ற தீர்மான 233, நாள். 12.03.2024, தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1998 (திருத்தம்) 2022-பிரிவு 81ன்படி மேற்படி வரியினை விதிப்பு செய்யப்படவுள்ள விபரத்தினை உரிய நடைமுறைகளை பின்பற்றி வரிவிதிப்பு செய்வது குறித்து பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் முறையீடுகள் ஏதும் இருந்தால் அதனை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் தெரிவிக்கும் பொருட்டு இவ்வலுவலக ந.க.எண்.306/2024/அ1, நாள்.21.05.2025ன்படி, தினசரி நாளிதழிகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இதன் மீது பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபணைகளும், முறையீடுகளும் வரப்பெறவில்லை என்பதால் தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் 1920 பிரிவு-34ல் தமிழக அரசின் அனுமதியுடன் நகர மன்றங்கள் சொத்துவரியுடன் கல்விவரி விதிக்க அதன் விகிதத்தினை பிரிவு 35(1)ன்படி சொத்துக்களின் ஆண்டு மதிப்பீட்டில் கீழ்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி கல்விவரி விதிக்க அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | தலைப்பு வாரியாக விபரம் | ஏற்கனவே உள்ள சதவீதம் | தற்போது திருத்தம் செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|---|
| 1 | பொது நிதி<br>(ஆண்டு வாடகை மதிப்பீட்டில்) | 7% | 7% |
| 2 | குடிநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு நிதி<br>(ஆண்டு வாடகை மதிப்பீட்டில் ) | 3% | 3% |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>கல்விநிதி<br>(ஆண்டு வாடகை மதிப்பீட்டில்)</td><td>0 %</td><td>2.5%</td></tr>
<tr><td>4</td><td>நூலகவரி (ஆண்டு வாடகை மதிப்பீட்டில் 1 % அடிப்படை வரிதொகையில் 10%)</td><td>1 %</td><td>1 %</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>11%</td><td>13.50%</td></tr>
</table>
(ந.க.எண்.306/2024/அ1)<br><br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>4</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க சட்டமன்ற அறிவிப்பு 2023-2024ன் மூலம் அறிவிப்பு (Announcement) செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை நகராட்சி உளுந்தூர்பேட்டை கிராம புல எண்.136/3, 136/9, 136/11A, 136/11B, 136/11C, 136/10, 139/1A, 139/5A, 140/1, 140/2A, 141/B மற்றும் 141/10A ஆகிய புல எண்களில் அமைந்துள்ள 5.50 ஏக்கர் நில இடத்தில் பேருந்து அமைக்க அரசாணை நிலை எண்.45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள்.25.09.2025 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அணுகு சாலை (Approach Road) அமைப்பதற்கு பூமிதான இடமான Survey No. 140/2B , 139/1B ஆகிய எண்ணில் உள்ள இடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர எந்த ஒரு ஆட்சேபனை இல்லை என்பதனை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td>677</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Survey No. 140/2B , 139/1B ஆகிய எண்ணில் உள்ள இடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர எந்த ஒரு ஆட்சேபணை இல்லை என்பதனை மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்.2245/2025/எப்1 | | |

நகர மன்ற தலைவர்

உளுந்தூர்பேட்டை நகராட்சி